1991 செப்டம்பர் 10]

எல்லாம் சட்ட ரீதியாக இருக்கின்ற நிலை. உறுப்பினர் அவர்கள் முன் வரிசையில் அமர்ந்து இருக்கிறார்கள். இது போன்ற சூழ்நிலையை உருவாக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 11, திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்.

மலட்டாற்றின் குறுக்கே அணை

11—

*256.—திரு. வ. சத்தியமூர்த்தி :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி, முதுகுளத்தூர், கமுதி பகுதிகளில் ஓடும் மலட்டாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதனுடைய மதிப்பீடு எவ்வளவு ?

(இ) நடப்பு நிதியாண்டில் அனுமதி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) 1990-91 ஆம் ஆண்டு விலைவாசிப்படி மலட்டாற்று திட்ட திருத்திய மதிப்பீடு பற்றிய கருத்துரு தலைமைப் பொறியாளர் (திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு) அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

(ஆ) 1990-91ஆம் ஆண்டு விலைவாசிப்படி திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 17.25 கோடியாகும்.

(இ) இத்திட்டம் 1991-92 ஆம் ஆண்டிற்கான பகுதி இரண்டு திட்டத்தில் (Part II Scheme) சேர்த்துக்கொள்ளப்பட்டு ரூ. 17.25 கோடியில் ரூ. 40.00 லட்சம் இவ்வாண்டிற்காக ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. தென்னவன்.

திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கடலாடி, முதுகுளத்தூர், கமுதி ஆகிய பகுதிகளில் வாழ்கிற மக்களின் மனம் குளிர்கிற வகையில் அவர்களின் நீண்டநாள் கோரிக்கையை

நிறைவேற்றி உத்தரவிட்ட தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த ஆண்டு அந்தத் திட்டத்திற்கு 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். எத்தனை ஆண்டுகளில் அந்த அணைக்கட்டு கட்டும் திட்டம் முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் இப்போது அந்த மலட்டாறு தாய்மை அடைந்துவிட்டதால் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் அதற்கு தாய் நதி அல்லது அம்மா நதி என்று பெயர் சூட்டப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு திட்டத்தை எடுக்கின்ற நேரத்திலே மொத்தமாக அந்த மதிப்பீட்டுத் தொகை சாங்ஷன் செய்யப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் அதற்கான நிதி ஆதாரங்களை அரசு ஒதுக்கி வருகிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டில் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வரவர்கள் இராமநாதபுரம் பகுதி வறட்சியான பகுதி என்ற காரணத்திற்காக பல்லாண்டுக் காலம் கிடப்பிலே இருந்த இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்ற உத்தரவை வழங்கி, இந்தத் திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வருகிற நிதி ஆண்டுகளில், அந்தந்த ஆண்டுகளில் உள்ள நிதி ஆதாரங்களுக்கேற்ப இந்தத் திட்டத்தை எவ்வளவு விரைவாக அரசு நிறைவேற்ற முடியுமோ அந்த அளவுக்கு நிதி ஆதாரங்களை ஒதுக்கி நிறைவேற்றித் தருமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது மலட்டாறு என்ற பெயரை மாற்றி, தாய் உள்ளத்தோடு இந்தத் திட்டத்தைத் தந்தமையால், நதியினுடைய பெயரை மாற்றி தாய் நதி அல்லது அம்மா நதி என்று பெயரிடலாமா என்று கேட்டார்கள். அந்தத் திட்டத்திற்கு மட்டுமல்ல, சொல்லுகின்றபோது நம்முடைய நாட்டைத் தாய்நாடு என்றுதான் சொல்லுவார்கள். ஆகவே மலட்டாறு என்ற பெயர் தொன்று தொட்டு வழங்கும் பெயராக இருந்தாலும், நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய கேள்வி ஒரு வேண்டுகோளாக இருப்பதால், அதைப் பரிசீலித்து அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன். இது தொடர்புடைய கேள்வி கேளுங்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1991 செப்டம்பர் 10]

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காமராஜர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், வ. உ. சிதம்பரனார் மாவட்டம் ஆகிய மாவட்டங்கள் அனைத்தும் பயன்பெறும் வகையில் அழகர் அணைத் திட்டம் என்ற திட்டம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் திட்டம் பற்றி இருந்தால் பதில் சொல்லலாம். இன்னொரு திட்டத்திற்குப் போனால் பதில் வராது. உட்காருங்கள்.

அடுத்த வினா. வினா எண். 12, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள்.

ஊராட்சிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டி.

12—

*559—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அனைத்து ஊராட்சிகளுக்கும் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் 'ஆம்' என்று பதில் சொல்லியதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அது எப்போது வழங்கப்படும், ஒரே ஆண்டில் தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படுமா, அது கலர் டி.வி.யா, அது ஒயிட் அண்ட் பிளாக்கா அல்லது போர்ட்டபுளா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவரை தமிழகத்திலே இருக்கிற ஊராட்சி மன்றங்களுக்கு 12,277 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 4,494 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட இருக்கின்றன. நடப்பு நிதி ஆண்டில் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி, தமிழக முதல்வரவர்கள் சார்பில் 1991-92ஆம் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலையைப் பொறுத்து சுமார் 700 கலர் டி.வி.க்களை வாங்கி, நிதி குறைவாக உள்ள ஊராட்சி